
**தினமணி (10.03.2025)**

# சிறுபாசனக் குளங்களை தூர்வார டிஎன்பிஎல் நிதியுதவி




சிறு பாசன குளங்களை தூர்வாருவதற்கான காசோலையை மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேலிடம் வழங்கிய டிஎன்பிஎல் ஆலையின் பொதுமேலாளர் (மனிதவளம்) கே. கலைச் செல்வன்.

கரூர், மார்ச் 9: கரூர் மாவட்டத்தில் உள்ள சிறு பாசனக் குளங்களை தூர்வாருவதற்கு டிஎன்பிஎல் ஆலை சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் ரூ.29.95 லட்சம் நிதியுதவி சனிக்கிழமை வழங்கப்பட்டது.

கரூர் மாவட்டம் புகழூர் காகித ஆலையின் சமுதாய நலப்பணிகள் திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டம், தோகைமலை ஊராட்சி ஒன்றியம், புதூர் கிராமத்தில் உள்ள மணியம்பட்டி எல்லைகுட்டை சிறுபாசனக் குளத்தை தூர்வார ரூ.7.54 லட்சமும், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், மொண்டிப்பட்டி அலகு-2-ன் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ் தோகைமலை வட்டம், பொருந்தலூர் ஊராட்சி, சின்னரெட்டிபட்டி கிராமத்தில் உள்ள கன்னல்வடநாயக்கனூர் சிறு பாசனக் குளம் தூர்வாருவதற்காக ரூ.5.67 லட்சமும், புதூர் கிராமம், மணிகருப்பகவுண்டன் சிறுபாசனக் குளத்தை தூர்வாருவதற்காக ரூ.10.74 லட்சமும், என மொத்தம் ரூ.23.95 லட்சத்துக்கான காசோலை வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சியில், டிஎன்பிஎல் ஆலையின் பொது மேலாளர் (மனிதவளம்) கே.கலைச்செல்வன் தூர்வாருவதற்கான காசோலையை மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேலிடம் வழங்கினார்.

**மாலை மலர் (08.03.2025)**




# புகழூர் காகித ஆலை சார்பில் குளங்களை தூர்வாருவதற்கு நிதி உதவி வழங்கல்

நொய்யல், மார்ச்.8-

புகழூர் காகித ஆலை சார்பில் பல்வேறு நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி தோகைமலை ஊராட்சி ஒன்றியம், புதூர் கிராமத்தில் உள்ள மணியம்பட்டி எல்லை குட்டை சிறுபாசன குளம் தூர்வாருவதற்காக ரூ.7 லட்சத்து 54 ஆயிரம், சின்னரெட்டிபட்டி கிராமத்தில் உள்ள கன்னல் வடநாயக்கனூர் சிறுபாசன குளம் தூர்வாருவதற்காக ரூ.5 லட்சத்து 67 ஆயிரம், புதூர் கிராமம், மணிகருப்பகவுண்டன் சிறுபாசன குளத்தை தூர்வாருவதற்காக ரூ.10 லட்சத்து 74 ஆயிரம் என மொத்தம் ரூ.23 லட்சத்து 95 ஆயிரம் நிதி உதவிக்கான காசோலையை காகித ஆலையின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் கரூர் மாவட்ட கலெக்டர் தங்கவேலிடம் வழங்கினார்.

**தினத்தந்தி (08.03.2025)**



# புகழூர் காகித ஆலை சார்பில் குளங்களை தூர்வாருவதற்கு நிதி உதவி வழங்கல்

நொய்யல், மார்ச்.8-

புகழூர் காகித ஆலை சார்பில் பல்வேறு நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி தோகைமலை ஊராட்சி ஒன்றியம், புதூர் கிராமத்தில் உள்ள மணியம்பட்டி எல்லை குட்டை சிறுபாசன குளம் தூர்வாருவதற்காக ரூ.7 லட்சத்து 54 ஆயிரம், சின்னரெட்டிபட்டி கிராமத்தில் உள்ள கன்னல் வடநாயக்கனூர் சிறுபாசன குளம் தூர்வாருவதற்காக ரூ.5 லட்சத்து 67 ஆயிரம், புதூர் கிராமம், மணிகருப்பகவுண்டன் சிறுபாசன குளத்தை தூர்வாருவதற்காக ரூ.10 லட்சத்து 74 ஆயிரம் என மொத்தம் ரூ.23 லட்சத்து 95 ஆயிரம் நிதி உதவிக்கான காசோலையை காகித ஆலையின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் கரூர் மாவட்ட கலெக்டர் தங்கவேலிடம் வழங்கினார்.

**தினகரன் (08.03.2025)**

செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில்

# பாசன குளங்கள் தூர்வார ரூ.23.95 லட்சம் வழங்கல்

வேலாயுதம்பாளையம், மார்ச் 8; கரூர் மாவட்டம் புகளூர் காகிதபுரத்தில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில் கரூர் மாவட்டத்தில் உள்ள சிறு பாசன குளங்களை தூர்வாருவதற்கு ரூ.23.95 லட்சத்திற்கான காசோலை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனமானது. சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்காகவும், நீர்வள மேம்பாட்டிற்காகவும், மரக்கன்றுகள் நட்டு பராமரித்தல், வாய்க்கால், குளங்களை தூர்வாருதல், மழைநீர் வழிப்பாதைகளை சீர்செய்தல் போன்ற பல்வேறு திட்டங்களை செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, கரூர் மாவட்டத்தில் உள்ள சிறுபாசன குளங்களை தூர்வாருவதற்காக ரூ. 23.95 இலட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், காகிதபுரம் அலகு-1ன் சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டம், தோகைமலை ஊராட்சி ஒன்றியம், புதூர்கிராமத்தில் உள்ள மணியம்பட்டி எல்லை குட்டை சிறுபாசன குளம் தூர்வாருவதற்காக ரூ.7.54 லட்சமும், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், மொண்டிப்பட்டி அலகு-2ன் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ் தோகைமலை வட்டம், பொருந்தலூர் ஊராட்சி. சின்னரெட்டிபட்டி கிராமத்தில் உள்ள கன்னல்வடநாயக்கனூர் சிறுபாசன குளம் தூர்வாருவதற்காக ரூ.5.67 இலட்சமும், புதூர் கிராமம், மணிகருப்பகவுண்டன் சிறுபாசன குளத்தை தூர்வாருவதற்காக ரூ.10.74 இலட்சமும், ஆகமொத்தம் ரூ.23.95 லட்சத்திற்கான காசோலையை காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் கரூர் மாவட்ட கலெக்டர் தங்கவேலிடம் வழங்கினார்.

தினமலர் (08.03.2025)

# சிறுபாசன குளங்களை தூர் வார ரூ.24 லட்சம்

## கலெக்டரிடம் டிஎன்பிஎல் வழங்கல்

**வேலாயுதம்பாளையம், மார்ச் 8–**

*தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் கரூர் மாவட்டத்தில் உள்ள சிறுபாசன குளங்களை தூர் வார, ரூ.23 லட்சத்து 95 ஆயிரம் நிதி வழங்கி உள்ளது.*

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்காகவும், நீர்வள மேம்பாட்டிற்காகவும், மரக்கன்றுகள் நட்டு பராமரித்தல், வாய்க்கால், குளங்களை துார் வாருதல், மழைநீர் வழிப்பாதைகளை சீர்செய்தல் போன்ற பல்வேறு திட்டங்களை செய்து வருகிறது.



கரூர் மாவட்டத்தில் சிறுபாசன குளங்களை தூர் வார கலெக்டர் தங்கவேலிடம் டிஎன்பிஎல் நிறுவனம் சார்பில் ரூ.23 லட்சத்து 95 ஆயிரத்திற்கான காசோலையை அதன் பொது மேலாளர் கலைச்செல்வன் வழங்கினார்.

அதன் ஒரு பகுதியாக காகிதபுரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் அலகு–1 தனது சமுதாய நலப்பணி திட்டத்தின் கீழ் தோகைமலை ஊராட்சி ஒன்றியம் புதுார் கிராமத்தில் உள்ள மணியம்பட்டி எல்லை குட்டை சிறுபாசன குளம் துார் வார ரூ.7 லட்சத்து 54 ஆயிரம், மொண்டிப்பட்டி தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் அலகு–2ன் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் தோகைமலை தாலுகா பொருந்தலுார் ஊராட்சி சின்ன ரெட்டிப்பட்டி கிராமத்தில் உள்ள கன்னல் வட நாயக்கனுார் சிறுபாசன குளம் துார் வார ரூ.5 லட்சத்து 67 ஆயிரம், புதுார் கிராமம் மணி கருப்ப கவுண்டன் சிறுபாசன குளத்தை துார் வார ரூ.10 லட்சத்து 74 ஆயிரம் என்று மொத்தம் ரூ.23 லட்சத்து 95 ஆயிரம் நிதியை மாவட்ட நிர்வாகத்திற்கு வழங்கி உள்ளது.

அதற்கான காசோலையை கலெக்டர் தங்கவேலிடம் காகித ஆலை நிறுவன பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் வழங்கினார்.